IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC. NO.1042/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | CHANDIRASEKARAN |
| FATHER'S NAME | : | MUNUSAMY |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 03th day of July 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பரதராமி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2020ஆம் வருடம் உதவி உதவி ஆய்வாளராக திரு.ஏழுமலை அவர்கள் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர்கள் தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டதாலும், அவருடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 06.12.2020 அன்று காலை 10.00 மணியளவில் இவ்வழக்கின் முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி திரு.ஏழுமலை என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பாலாஜி, த/பெ.முனிசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.556/2020 இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் தனகோபால் மற்றும் சத்தியநாதன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து TN 04 P 2097 Hero Honda Splendor என்ற வண்டியின் கியர் பாக்ஸ் டோர் மற்றும் பேட்டரி பாக்ஸ் டோரின் உடைந்த பாகங்கள்–ஐ கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு

அனுப்பிவைத்தார். பின்னர் சாட்சிகள் பாலாஜி, கோவில்ராஜ், தனகோபால், சத்தியநாராயணன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியைத் தேடி வந்த நிலையில் அன்றைய தினமே பகல் 13.00 மணியளவில் சாமிரெட்டிபள்ளி பஸ்நிறுத்ததிடம் இருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும், கைப்பற்றபட்ட வழக்கு சொத்து சாபொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,

Judicial Magistrate,

Gudiyatham.